### புகார் அளிக்கும் உரிமை

- காவல்துறையில் புகார் பதிவு செய்ய உரிமை உண்டு.
- குடும்ப வன்முறை நடந்தாலும் அல்லது நடக்கப்போவதாக இருந்தாலும், வாய்மொழி/எழுத்து மூலம் புகார் அளிக்கலாம்.
- புகாரின் எழுத்துப்பூர்வ நகலை இலவசமாக பெற உரிமை உண்டு.

### 7. பாதுகாப்பான சேவைகள் பெறும் உரிமை

- உறைவிட இல்லம், மருத்துவ சிகிச்சை, மனநலம் ஆலோசனை போன்ற சேவைகளைப் பெற உரிமை உண்டு. உறைவிடம் கோருகிற, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சேர்க்கை அனுமதிக்கான வயது வரம்பு எதுவுமில்லை.
- இதற்கு பாதுகாப்பு அலுவலர், காவல்துறை, சமூக நல அலுவலகங்கள் வழியாக உதவி பெறலாம்.

### 8. சொத்துரிமைகள் மற்றும் பொருளாதார பாதுகாப்பு

- நகை, சம்பளம், பணம், ஆவணங்கள் ஆகியவற்றை வீட்டுக்குள் பாதுகாப்பாக வைத்திருக்கும் உரிமை.
- அவற்றை பறிக்கக் கூடாது; பறிக்கப்பட்டால் மீண்டும் பெற உரிமை உண்டு.

### 9. குழந்தைகளுக்கான உரிமைகள்

- பாதிக்கப்பட்ட பெண்ணின் குழந்தைகளுக்கு உறைவிட வசதி வழங்கப்பட வேண்டும்.
- ஆண் குழந்தைகள் 6 வயது வரை மற்றும் பெண் குழந்தைகள் 10 வயது வரை தாயுடன் சேர்ந்து பாதுகாப்பு இல்லத்திலேயே தங்க அனுமதி வழங்கப்பட வேண்டும்.
- பெண்ணின் கைக்குழந்தை இருப்பின் அக்குழந்தை தாயுடன் சேர்ந்து படுப்பதற்கும் உரிமை உண்டு.
- 6 வயதுக்கு மேற்பட்ட ஆண் குழந்தைகள் மற்றும் 10 வயதுக்கு மேற்பட்ட பெண்குழந்தைகள் தாய் தங்கவைக்கப்பட்டுள்ள உறைவிட இல்லத்திற்கு அருகிலுள்ள பொறுப்பான குழந்தைகள் இல்லங்களில் சேர்க்கப்பட வேண்டும்.
- இவ்வாறு குழந்தைகள், குழந்தைகள் இல்லங்களில் தங்கும்போது, தாய் மற்றும் குழந்தைகள் அடிக்கடி சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

### தகவல் பெறும் உரிமை

குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005ன் கீழ் தமக்குள்ள அனைத்து உரிமைகள், நிவாரணங்கள், பாதுகாப்பு அலுவலர்கள், சேவை வழங்குநர் மற்றும் இலவச சட்ட உதவி சேவைகள் போன்ற சேவைகள் கிடைப்பது பற்றிய தகவல் பெற உரிமை உண்டு.

### சட்டப்பூர்வ நடவடிக்கை பெறும் உரிமை

- குடும்ப வன்முறை வழக்குகள் குற்றப் பதிவேட்டில் பதிவு செய்யப்படும் உரிமை.
- பாதுகாப்பு ஆணைகள் மீறப்பட்டால் காவல்துறை உதவியுடன் வழக்குப் பதிவு செய்ய உரிமை.
- பாதுகாப்பு ஆணைகள் மீறப்படுதல்: பாதுகாப்பு ஆணை அல்லது இடைக்கால பாதுகாப்பு ஆணை எதிர் மனுதாரரால் மீறப்படுவது தண்டனைக்குரிய குற்றமாகும்; ஓராண்டு கால சிறை அல்லது 20,000 ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கத்தக்கதாகும்.
- கலந்தாய்வு / பேச்சுவார்த்தை மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்ட பெண் கலந்தாய்வு பெற, நீதித்துறை நடுவரின் உத்தரவு அவசியம்.
- வேறு அமைப்புகள் பேச்சுவார்த்தை நடத்தினால், அவை சட்டபூர்வமாக செல்லாது.

### மருத்துவ உதவி மற்றும் நல பராமரிப்பு

- குடும்ப நிகழ்வு அறிக்கை தாக்கல் செய்யாததால் மருத்துவ உதவி மறுக்கக் கூடாது.
- அனைத்து மருத்துவ சோதனைகள், சிகிச்சைகள் இலவசமாகவும் முன்னுரிமை உடனும் வழங்கப்பட வேண்டும்.
- மருத்துவ சிகிச்சையுடன் உளவியல் ஆதரவு தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

---

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள**
**QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 181**

**சிறகுகள் உதவி எண்:**

**சிறகுகள்**

## தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)

# குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

**அறிமுகம்**
குடும்பங்களில் பெண்களுக்கு எதிராக அவர்களின் சொந்த இரத்த பந்தங்களாலும் திருமணத்தால் ஏற்படும் உறவுகளாலும் நிகழ்த்தப்படும் வன்முறைகளை சமூகப்பிரச்சனையாக அங்கீகரித்து, அதிலிருந்து பெண்களைப் பாதுகாப்பதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

**குடும்ப வன்முறை என்றால் என்ன?**
***உடல்ரீதியான வன்முறை***
காயப்படுத்துவது, உடல் உறுப்புகளுக்கு ஊறு விளைவிப்பது, காயம் வெளியே தெரியாத வகையில் வலியை ஏற்படுத்துவது, தற்கொலை செய்துகொள்ளத் தூண்டுவது, பிற நபர்களைத் தூண்டிவிட்டுத் தாக்கச்செய்வது, உயிருக்கு ஆபத்து விளைவிப்பது ஆகிய செயல்களை உள்ளடக்கியதாகும்.

***பாலியல் ரீதியான வன்முறை***
பாலியல் ரீதியாக துன்புறுத்துவது, சிறுமைப்படுத்துவது, உறுப்புகளை கேலி செய்வது, ஆபாசப் படங்களை பார்க்கச்சொல்லியும் அதன்படி நடந்து கொள்ளச்சொல்லியும் துன்புறுத்துவது, பிறருடன் ஒப்பிட்டு பாலியல் ரீதியாக கொச்சைப்படுத்துவது, விருப்பத்திற்கு மாறான, முறையற்ற வகையில் உறவுகொள்ள கட்டாயப்படுத்துவது ஆகிய செயல்கள் உள்ளடங்கியவை பாலியல் வன்முறையாகும்.

***உளவியல் ரீதியான வன்முறை***
கேலி செய்தல், அவமதித்துப் பேசுதல், தரக்குறைவாகத் திட்டுவது, ஆண்வாரிசு பெற்றெடுக்கவில்லை என குறை கூறுவது, மனதை புண்படுத்த வேண்டும் என்ற நோக்கில் சிறுமைப்படுத்திப் பேசுதல், பாதிக்கப்பட்டவரின் உறவினர்களை அவமதித்தல், அவர்களை துன்புறுத்தப்போவதாக அச்சுறுத்துதல், குழந்தைகளை தாயிடமிருந்து பிரித்தல் போன்ற செயல்களை உள்ளடக்கியது ஆகும்.

***பொருளாதார வன்முறை***
வீட்டுத்தேவைகளுக்குப் பணம் தர மறுப்பது அல்லது அத்தேவைகளை பூர்த்தி செய்யாதிருப்பது, வீட்டு வாடகை, மின்சாரக் கட்டணம் ஆகியவற்றை செலுத்த மறுப்பது, பாதிக்கப்பட்டவரின் நகைகள், பணம் ஆகியவற்றைக் கவர்ந்துகொண்டு தரமறுப்பது, நிதி ஆதாரங்களை முடக்குவது அல்லது நாசப்படுத்துவது, சொத்துக்களை மாற்றிக் கொடுக்கும்படி, விற்றுக்கொடுக்கும்படி வற்புறுத்துவது, ஆவணங்களை மறைத்து வைத்துக்கொண்டு தர மறுப்பது, சொத்துக்களைத் தெரியாமல் விற்றுவிடுவது, சம்பளப்பணத்தை பறித்துக்கொள்வது, உடமைகளைப் பயன்படுத்த விடாமல் தடுப்பது மற்றும் விற்பது, பாதிக்கப்பட்டவருக்குக் கிடைக்க வேண்டிய பயன்கள், வசதிகளைக் கிடைக்கவிடாமல் தடுப்பது, குழந்தைகளின் பள்ளிக்கட்டணம், மருத்துவ செலவுகளை செலுத்தாதிருத்தல் போன்றவை பொருளாதார வன்முறையில் அடங்கும்.

**இச்சட்டத்தின் கீழ் பொறுப்புடைய நபர்கள்**
***பாதுகாப்பு அலுவலர்கள்***
இச்சட்டத்தின்படி பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் கிடைக்க உதவவும், நீதிமன்ற நடுவர் இடும் பணிகளைச் செய்யவும், மாநில அரசானது, மாவட்டந்தோறும் பாதுகாப்பு அலுவலர்களை நியமித்துள்ளது. தமிழகத்தில் அனைத்து பாதுகாப்பு அலுவலர்களும் பெண்களே ஆவர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் சமூக நல அலுவலகங்களைப் (ஆட்சியர் அலுவலக வளாகங்கள்) பணியிடமாகக் கொண்டுள்ளனர்.

***காவல்துறை அதிகாரிகள்***
அனைத்து காவல்துறை அதிகாரிகளும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம், 2005ன் கீழ் பொறுப்பளிக்கப்பட்டவர்கள். அவர்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உடனடி பாதுகாப்பு வழங்கி, தேவையான உதவிகளைச் செய்ய வேண்டும்.

***மருத்துவ அதிகாரிகள்***
மருத்துவ அதிகாரிகள், குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களை பரிசோதித்து சிகிச்சை அளிக்க வேண்டும். மருத்துவ பரிசோதனை, பெண்களுக்கு சட்டத்தின் கீழ் உரிய நிவாரணங்களைப் பெற உதவும்.

***உறைவிட இல்லம்***
உறைவிட இல்லம் என்பது மாநில அரசால் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படும் பாதுகாப்பான இடமாகும். இது, குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் தற்காலிகமாக தங்குவதற்கான வசதி மற்றும் பாதுகாப்பை வழங்கும்.

***சேவை வழங்குநர்கள்***
சட்ட உதவி, மருத்துவ உதவி, நிதியுதவி, ஆலோசனை உள்ளிட்ட பெண்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாக்கும் சேவைகளை வழங்க நியமிக்கப்பட்டுள்ள தன்னார்வ அமைப்புகள்.

**சட்ட உதவி வழக்குரைஞர்கள்**
ஒவ்வொரு நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் சட்ட உதவி வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட வேண்டும். கோட்ட சட்ட சேவைகள் குழு தனது பட்டியலில் உள்ள வழக்குரைஞர்களை உறைவிட இல்லங்களுக்கு அனுப்பி, அங்கு தங்கியிருக்கும் பெண்களுக்கு குடும்ப வன்முறை தடுப்பு சட்டம், 2005ன் கீழ் தேவையான சட்ட அறிவுரைகள் மற்றும் உதவிகளை வழங்க வேண்டும்.

**முக்கிய உரிமைகள்**
***1. பாதுகாப்பு உரிமை***
- உடல், பாலியல், உளவியல், பொருளாதார வன்முறையிலிருந்து பாதுகாப்பு பெறும் உரிமை.
- மீண்டும் வன்முறை நடைபெறாமல் தடுக்க பாதுகாப்பு உத்தரவு கோரலாம்.
- காவல்துறை அதிகாரிகளின் உடனடி பாதுகாப்பு பெறும் உரிமை.
- அவசரநிலையில் பாதுகாப்பு அலுவலர், காவல்துறை இருவரும் சம்பவ இடத்துக்கு சென்று பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

***2. வீட்டில் வாழும் உரிமை***
திருமணம் செய்த வீடு / குடும்பம் நடத்தும் வீடு உள்ளிட்ட இடங்களில், பெண்களுக்கு வசிப்பதற்கான உரிமை உண்டு.

***3. நிவாரண உரிமைகள்***
- பராமரிப்பு செலவு பெறும் உரிமை – குழந்தைகள், மருத்துவம், பள்ளிக்கட்டணம் முதலிய செலவுகளுக்காக.
- பண நிவாரணம் – பொருளாதார இழப்புகள், மருத்துவச் செலவுகள் போன்றவற்றுக்காக.

**உடனடி உதவி பெறும் உரிமை**
- அவசரநிலையில் காவல்துறை, பாதுகாப்பு அலுவலர் உதவி பெறும் உரிமை.
- மருத்துவ சிகிச்சை, பாதுகாப்பான உறைவிடம் பெறும் உரிமை.

சட்ட உரிமைகள்
நீதிமன்றத்தில் பாதுகாப்பு, குடியிருப்பு, நிதி, காவல், இழப்பீடு உள்ளிட்ட உத்தரவுகள் பெற உரிமை உண்டு.
இலவச சட்ட உதவி பெறும் உரிமை.